sky தமிழ் NEWS

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்

skytamil.lk@gmail.com
www.news.skymediasl.com

February 6, 2021 | SATURDAY | வார இதழ் | @skytamil.lk




## கொரோனா:
கர்ப்பிணிகள் பாதுகாப்பாக இருப்பது எப்படி?

## யூடியூபில் சேனல்
ஆரம்பிப்பது எப்படி?

துணிந்தெழு கவிதைகள்

## ரினூஷா நௌஷாட்
ஒரு நேர்காணல்

# Omer Embroidery & Garment

**உங்கள் கடைகள்,அரச மற்றும் தனியார் பாடசாலைகள்,**
**நிறுவனங்கள், கழகங்களுக்கு திறன்பட நியாயமான கட்டணங்களில்**
Embroidery **செய்து கொள்ள இன்றே அழையுங்கள்.**
**எம்மிடம்** Tshirts > Shirts> Bags> Tie **இன்னும் பல**
**முறையாக தைத்து** Embroidery **செய்து பெற்றுக்கொள்ளலாம்.**











Embroidery Your Personalised T-shirt

Promote Your Product, business, Brand with Everyone.

Contact for more details

**0772446754 | 0750732549**

துணிந்தெழு கவிதைகள்

# என் அன்பு தாய்க்காக மகளின் கவி மடல்

உன் கருவறையில் எனை
வைத்து பத்து மாதங்கள் பக்குவமாய்
பாதுகாத்தாய்
உன் கண்ணுக்குள் வைத்து
கலங்காது எனை பராமரித்தாய்
தரையில் விழ விடாது எனை
ஓடி வந்து ஏந்தியும் கொண்டாய்

உன் நெஞ்சில் அணைத்து
பக்குவமாய் வளர்த்தெடுத்தாய்
தலை நிமிர்ந்து நான் இன்று நடக்க அன்று
வடிகாலாய் நீ இருந்தாய்

அன்பு பாசம் என்ன என்பதை சீராட்டி புரிய
வைத்தாய்
இத்தனையும் எனக்காக செய்த
என் தாயே........

உனக்காக நான் என்ன செய்தேன்...
என் சிறு வயதில் உன்னை
வேதனைப் படுத்திய நாட்களே அதிகம்
அழுது அடம் பிடித்து -
பெற்று கொண்ட விடயமோ பலவிதம்
வெட்கத்தோடு இந்த வரிகளினை
வடிவாக்குகிறேன் இன்று
மன்னித்து விடு என்னை

ஆனால் அதன் பின்னணியில் – உன்
விட்டுக் கொடுத்தலையும் தியாகத்தையும்
புரிந்து கொள்ள தவறி விட்டேன் அன்று – உன்
பாசத்தை உணராமல் விட்டு விட்டேன்

அரை கஞ்சி குடித்தாலும்
குறைவின்றி எனை வளர்த்தவரே.....

பிறை நெற்றி திலகம் மறைந்தாலும்
நிறை அன்போடு காத்தவரே !

கடைகோடி வாழ்கைக் வாழ்ந்தாலும்
விடையறிய அறிவுபசி தூண்டியவரே

நோய்நொடியில் வீழ்ந்தாலும்
வாய்திறவாது என்நலனை எண்ணி
அயராது உழைத்தவளே
பல அவதாரம் எடுத்து வளர்த்து வாழ்வில்
ஒரு இடம் தந்தவரே...!

நெஞ்சத்தில் புதைந்த உன்னை
பஞ்சத்தில் புதைக்கிறேன்
வஞ்சத்தில் சிக்குண்டு
இருகொல்லியாய் இருப்புகொள்ளாது
வழியறியாது தவிக்கிறேன்

வலிக்கிறது மனசு
நான் பக்குவமான போது தான்
புரிந்து கொண்டேன்
உன் பாசமும் தியாகமும்
எத்தனை மேலானது என்று....

உன் வலியின் வேதனை
எத்தனை ஆழமானது என்று...
எந்த நிலையிலும்– உன்னை
என்னருகில் வைத்திருக்கவே ஏங்குகிறேன்



என் பணிவிடைகள் மூலம் – உன்னை
என் குழந்தையாய் சீராட்ட துடிக்கிறேன்
என் தாயே

என் முதல் கவிதையின் முதல் வாசகமும் நீ
வாசகியும் நீ
இந்த வசனம் முழுவதும் நீயம்மா


என் வாயால் நான் பேசிய முதல் வார்தை முதல்
கவிதை
உம்மா...........

உலகத்தயே எனக்கு அறிமுகம் செய்தாய்
என் தந்தை உட்பட
உன் அறிமுகத்தினால் தான் உறவுகள் என்ற
போர்வைக்குள்ளே பதப்படுத்தப்பட்டிருக்கிறேன்

என் தாயாய் நீ இருந்து -
எனக்கு தந்த பாசம், தியாகம் – இவை
எல்லாவற்றையும் இரட்டிப்பாக்கி
நான் தருவேன் உனக்கு.............

குடும்பச் சுமையை
நெஞ்சில் சுமந்தாய்
வேலைச் சுமையை
கைகளில் சுமந்தாய்
வீறு கொண்டெழுந்து
நீ அழகாக -புன்னகைப்பாய்
உன் உடம்பு வலிக்க
உன் உயிரை மாய்த்து,
புது மனிதனாய்-என்னை
மண்ணில் பிறக்கவைத்தாயே-தாயே

தாலாட்டி சீராட்டி -வளர்த்த அன்னையே
உன்னை தரணியில் -புகழ்பாட
என் வாயினில் வார்த்தைகளே-இல்லை
உன்னை கற்பனை பண்ணி-கவி எழுத,
என் மனதில் இருந்து
வார்த்தைகளும் வரவில்லை காரணம் நீயே ஒரு மிக
சிறந்த கவிதை கவிதைக்கு எங்கனம் கவி எழுத
சொற்கள் தேடுவேன்
உன்னை சொல்லால் -விளக்கமுடியாது,
நீ ஒரு அணிவர்ணம்-தாயே



**நிந்தவூர் கவி**
**பாத்திமா சப்னா**

# முரண் அழகு

மந்தைகள்
இடையனின் புல்லாங்குழல்
மேய்ந்தன

உதிர்ந்த சிறகில்
காற்றுப் பறந்தது

மெழுகுவர்த்தியில் உருகியது
இருள்

பழுத்த இலையை
அணில்
கடிக்கவில்லை

வண்ணத்துப் பூச்சியை
பூவென்று நினைத்தது
வண்டு

பலமாய் விழுந்த சொல்
முள்ளைத் தைத்தது

தண்ணீரை நனைத்தது
அடுப்பு வெப்பம்


வெய்யில் விழுகிறது
பொறுக்கியெடுக்க முடியவில்லை



ராஜகவி ராகில்

## நான் என்பதை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாதது.

பல பரிமாணங்களில் உலாவி வருபவள் உண்மையாய் என்னை
நேசித்தவர்களுக்கு நான் உயிரானவள் மெய்யான என் அன்பில்
மூழ்கியவர்களுக்கு நான உரிமையானவள்.
என் அன்பை உணராமல் வெறுப்பவர்களுக்கு நான் பொய்யானள். என்னை
புரியாமல் இருப்பவர்களுக்கு நான் புதிரானவள்.
என்னையும் என் அன்பையும் அறியாதவர்களுக்கு நான் விசித்திரமானவள்.
என்னை ஆராய்பவர்களுக்கு நான் வினோதமானவள்.
எப்படி இருந்தாலும் என் அன்பு வாழ்வானது
சாகும் வரை அள்ள அள்ள குறையாமல் அளந்து கொண்டே போகும்
அளவில்லாதது



கவிப்புயல் ஸஹ்ரா
மாத்தளை ஆமினா தேசிய பாடசாலை

## பலஸ்தீன் தூதுவர் சமித்த தேரருடன் இணைந்து,

# சுக்ராவின் வீட்டுக்கு விஜயம்

சிரச போட்டியில் 20 இலட்சம் ரூபாய்களை வென்ற சுக்ரா முனவ்வரின் வீட்டுக்கு இலங்கைக்கான பலஸ்தீன் நாட்டுத் தூதுவர் சுகைர் டர் சயீட் விஜயமொன்றை மேற்கொண்டார். இதன்போது பிடிக்கப்பட்ட படங்களையே இங்கு காண்கிறீர்கள்.






உலகத்தையே முடக்கிப் போட்டிருக்கும் கொரோனா வைரஸ் தொற்று, கர்ப்பிணிகளுக்கு எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தும்?



# கொரோனா: கர்ப்பிணிகள் பாதுகாப்பாக இருப்பது எப்படி?

பொதுவாக கர்ப்பக் காலத்தில்
பெண்களின் நோய்
எதிர்ப்புச் சக்தி சற்றுக் குறைவாக
இருந்தாலும், பெரிய
அளவில் நோய்த் தொற்று
ஏற்படுவதில்லை. ஆனால்,
இந்தக் கொரோனாவைப்
பொறுத்தவரை, கர்ப்பிணிப்
பெண்களுக்குத் தொற்று ஏற்படும் ரிஸ்க்
அதிகம் இருப்பதால், அவர்களும்
அவர்களை கவனித்துக் கொள்வோரும்
மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க
வேண்டும்.
இருமல், தொண்டை வறட்சி, மூக்கில்
நீர் ஒழுகுதல்
ஏற்பட்டால் சாதாரண ஜலதோஷத்தின்
அறிகுறிகளாகக்
கூட இருக்கலாம். அதற்கான
மாத்திரைகள், நீராவி பிடித்
தல் மூலம் இவற்றைக் குணமாக்கி
விடலாம். கோவிட்-19
தொற்று கொண்ட நபர்களுடன்
தொடர்பு எதுவும் இல்லாத
போது, ஆரம்ப நிலையிலேயே
குணமாகிவிடும்.
ஆனால், தொடர்ந்து இந்த அறிகுறிகள்
இருந்தால் உடனே
உங்கள் மருத்துவரை அணுக
வேண்டும். ஆனால் பீதி அடையத்
தேவையில்லை. கர்ப்பிணிப் பெண்கள்
வெளியே செல்வதையோ,
விசேஷங்களில் பங்கேற்பதையோ
கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

தொற்று ஏற்பட்டால், பிரசவத்திற்குப்
பிறகோ, பாலூட்டும் சமயத்திலோ
தாயிடமிருந்து குழந்தைக்கும்
வருமா என்பது இதுவரை சரியாக
நிரூபிக்கப்படவில்லை. கர்ப்பம் உறுதி
செய்யப்பட்டு மூன்று மாதங்கள்
ஆன பிறகு உடனே செக்-அப் செய்ய
அடிக்கடி செல்ல வேண்டுமா என்பதை
டாக்டரிடம் கேட்டுக்
கொள்ளுங்கள். சர்க்கரை வியாதி,
வயதான பிறகு ஏற்படும் கர்ப்பம்,
இரட்டைக் குழந்தைகள் போன்ற
பிரச்சினைகள் இருந்தால் மட்டுமே
உங்கள் மருத்துவரின் அறிவுரைப்படி
அவ்வப்போது செக்-அப் செய்து
கொள்ள வேண்டும்.
மற்றபடி கூடுமானவரை வெளியே
செல்வதைத் தவிர்க்க வேண்டும்.
தொற்று
பயத்தில் சிலர் வீட்டிலேயே பிரசவத்தை
வைத்துக் கொள்வதைப் பற்றிக்
கேட்கிறார்கள். உடனடி
மருத்துவ உதவி, மருத்துவர்கள்
மற்றும் நர்ஸ்களின் கவனிப்பு, நவீன
மருத்துவக் கருவிகள் பயன்பாடு
இவையெல்லாம்
மருத்துவமனைகளில்தான் கிடைக்கும்.
பிரசவத்துக்கு மருத்துவமனைதான்
சிறந்தது.
மிகச் சமீபத்தில், சீனாவில் உள்ள
மகப்பேறு மருத்துவர்களின் சில
அனுபவங்கள் மூலம் எங்களுக்கு
சில விவரங்கள் கிடைத்துள்ளன.

அதன்படி கோவிட்-19 தொற்று ஏற்பட்டால் கர்ப்பிணிகளுக்கு தானாகவே குறைப் பிரசவம் ஆகலாம். அல்லது குழந்தை வளர்ச்சி குன்றிப் போய் இருக்கும். ரத்த அழுத்தம் கொண்ட பெண்கள் என்றால், மருத்துவர்கள் ப்ரீமெச்சூர் ஆக குழந்தையைக் குறிப்பிட்ட காலத்துக்கு முன்பாகவே டெலிவரி செய்ய நேரிடலாம்.

## தற்போதைய சூழல் எப்படி உள்ளது டாக்டர்?

சிசேரியன் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையை எடுக்க வேண்டிய சில கேஸ்களில், முன்பு போல வழிமுறைகளைப் பின்பற்றினாலும், சில முக்கியமான பாதுகாப்பு நடவடிக்கைகளையும், அதற்கேற்ற நெறிமுறைகளையும் (Precautions and Protocols) பின்பற்ற வேண்டியிருக்கிறது.
இதனால் சற்று தாமதமாகிறது. ரொம்பவும் லேட் செய்தாலும் குழந்தையைப் பாதிக்கும். எனவே, குறிப்பிட்ட நேரத்துக்குள் எல்லா பாதுகாப்புகளுடனும் செயல்படுகிறோம்.

## வேலைக்குப் போகும் கர்ப்பிணிப் பெண்கள் தங்களை எப்படி பாதுகாத்துக் கொள்ளவேண்டும் டாக்டர்?

இப்போது நிறையப் பெண்கள் ஒர்க் ஃப்ரம் ஹோம் முறையில் வேலை பார்க்கிறார்கள். இருந்தாலும், வெளியே சென்று பார்க்க வேண்டிய சில பணிகளும் இருக்கின்றனவே... அத்தகையப் பெண்கள் கர்ப்பம் அடைந்தால், சோஷியல் டிஸ்டன்ஸ் முறையில் யார் அருகேயும் செல்லாமல் பாதுகாத்துக் கொள்வது அவசியம். ஏனென்றால் தங்களிடம் தொற்று இருப்பதே அறியாமல் சிலர் இருக்கலாம். எல்லோரிடமும் விலகியே இருங்கள்.
கண்டிப்பாக முக கவசம், கையுறை அணியுங்கள். மருத்துவர் உங்கள் மற்றும் குழந்தையின் நன்மைக்காகத்தான் சொல்கிறார் என்று உணர்ந்து அதைப் பின்பற்றுங்கள். பயம் கொள்ளாமல் பாதுகாப்பைப் பின்பற்றுங்கள்.






ஜெ.எம்.பாஸித் - Dip in IT

# யூடியூபில் சேனல் ஆரம்பிப்பது எப்படி? வருமானம் ஈட்ட வாய்ப்பு உண்டா?

21-ம் நூற்றாண்டில் தொழில்நுட்பம் மிகவும் விறுவிறுப்பாக வளர்ந்து வருகிறது. இந்த வளர்ச்சி, ஸ்மார்ட்போனின் வருகைக்குப் பிறகு ராக்கெட் வேகம் பிடித்தது. இலங்கையில் குறைந்த விலையில் டேட்டா கிடைக்கத் தொடங்கியது. இணையம் சார்ந்த சேவைகளைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் நல்ல அளவில் உயர்ந்தது. இதில், வீடியோ ஸ்ட்ரீமிங் தளங்களும் நல்ல வளர்ச்சியைக் கண்டன. முக்கியமாக, இலவசமாகக் கிடைக்கும் யூடியூப்பில் பகிரப்படும் வீடியோக்கள், மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

இந்த யூடியூப் சேவை, 2005-ம் ஆண்டு தொடங்கப்பட்ட வீடியோக்கள் பகிரும் தளமாகும்.




இதன் வளர்ச்சியைக் கண்டு, கூகுள் இதை வாங்கித் தனது அங்கமாக யூடியூப்பை மாற்றியது. அமேசானின் ஆய்வு நிறுவனமான அலெக்சா இன்டர்நெட்டின் (alexa internet inc.) ஆய்வுப்படி, 2018-ம் ஆண்டில் கூகுளுக்கு அடுத்து மிகவும் பிரபலமான இணையதளமாக இருப்பது யூடியூப்தான். இந்த ஆண்டு மே மாத நிலவரப்படி, ஒரு நிமிடத்திற்கு 500 வீடியோக்கள் என்ற அளவில் யூடியூபில் பதிவேற்றப்படுகின்றன. இதனால் வீடியோ உருவாக்கி பலரும் யூடியூபில் வருவாயும் ஈட்டத் தொடங்கிவிட்டனர்.

யூடியூபில் வருமானம் ஈட்ட, முதலில் நீங்கள் ஒரு யூடியூப் சேனலை வைத்திருக்க வேண்டும்.

## அதற்கு ஒரு கூகுள் அக்கவுன்ட் தொடங்கவேண்டியது அவசியம்.

இதை வைத்து யூடியூபில் சேனல் ஒன்றைத் தொடங்கமுடியும். அதற்குப் பிறகு உங்களுக்குப் பிடித்தவாறு யூடியூபில் வீடியோக்கள் பகிரலாம்.


உங்களுடைய காணொளிகளில் Copyright பிரச்சினை இருந்தால், யூடியூப் நிறுவனம் உங்களுக்குத் தெரியப்படுத்திவிடும். பிறகு, Copyright உரிமையாளர் சம்மதித்தால் மட்டுமே உங்கள் காணொளியை யூடியூப் நிறுவனம் அனுமதிக்கும். இதற்கு, உங்கள் காணொளியின் வருமானத்தில் ஒரு பங்கை Copyright உரிமையாளரிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும் அல்லது வீடியோவை நீக்கவேண்டியதிருக்கும்.

உங்கள் யூடியூப் கணக்கின் செட்டிங்க்ஸில் உள்ள channel status and features என்பதை கிளிக் செய்தால் உங்கள் சேனல் பற்றிய அனைத்து விபரங்களும் வரும். அதில் Monetization

## வருமானத்தில் 45 சதவிகிதத்தை யூடியூப் நிறுவனம் எடுத்துக்கொள்ளும். மீதமுள்ள 55 சதவிகிதம் காணொளியைப் பதிவேற்றிய சேனலுக்குக் கிடைக்கும்.

என்பதை செலக்ட் செய்தால் மட்டுமே உங்களால் பொருளீட்ட முடியும். இதைச்செய்ய உங்கள் சேனல் **ஆயிரம் சந்தாதாரர்கள்** (subscribe) **பெற்றிருக்க வேண்டும்**. மேலும், கடந்த ஒரு **வருடத்தில் உங்கள் சேனல் 4,000 மணி நேரம் பார்வையாளர்களால் பார்க்கப்பட்டிருக்க வேண்டும்.**

இவற்றைச் செய்திருந்தால் யூடியூப் நிறுவனம் உங்கள் சேனலை ஆய்வுசெய்து, பின்னர் தனது யூடியூப் பார்ட்னர் புரொக்ராமின் கீழ் இணைத்துக்கொள்ளும். இதற்குப் பின், உங்கள் வங்கிக் கணக்கின் விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். Monetization மூலம் யூடியூபின் விளம்பரங்கள் உங்கள் வீடியோக்களில் தோன்ற ஆரம்பிக்கும். இவை, கூகுளின் AdSense மூலம் வரும்.




உங்களின் பார்வையாளர்கள் இதை ஸ்கிப் செய்தால் ஒரு சிறிய தொகையும், முழு விளம்பரத்தையும் பார்த்தால் ஒரு தொகையும், அந்த விளம்பரத்தை க்ளிக் செய்தார்கள் என்றால் ஒரு தொகையும் கிடைக்கும்.

இது, உங்கள் வீடியோவைப் பார்க்கும் பார்வையாளர்களின் பகுதியைப் பொறுத்து மாறலாம். உதாரணத்திற்கு, அமெரிக்கப் பார்வையாளர் உங்கள் வீடியோவில் வரும் விளம்பரத்தைப் பார்த்தால் வரும் தொகை, இலங்கை பார்வையாளரிடமிருந்து வரும் தொகையைவிட அதிகமாக

இருக்கும். இப்படி மொத்தம் வரும் வருமானத்தில் 45 சதவிகிதத்தை யூடியூப் நிறுவனம் எடுத்துக்கொள்ளும். மீதமுள்ள 55 சதவிகிதம், காணொளியைப் பதிவேற்றிய சேனலுக்கு கிடைக்கும். மொத்தமாக **உங்கள் சேனலில் 100 டொலருக்கு மேல் வருவாய் ஈட்டிவிட்டால்**, அந்தத் தொகையை கூகுள் நிறுவனம் உங்கள் வங்கிக் கணக்கிற்கு செலுத்திவிடும்.

யூடியூபில் பதிவேற்றம் செய்வதற்கென சில விதிமுறைகள் உள்ளன. அந்த விதிமுறைகளைப் பின்பற்றவில்லையெனில், உங்கள் காணொளிகளை யூடியூப் தானாக முன்வந்து நீக்கி விடும். தினசரி வீடியோக்கள் பதிவேற்றம் செய்பவர்களுக்கு சந்தாதாரர்கள் அதிக அளவில் வர வாய்ப்புகள் உள்ளன. எனவே, இவர்கள் அதிக வருமானத்தை ஈட்டக் கூடும். ஒரு லட்சம் சந்தாதாரர்களை வைத்திருக்கும் சேனலுக்கு Silver Award, ஒரு மில்லியன் சந்தாதாரர்களுக்கு மேல் இருந்தால் Gold Award, பத்து மில்லியன் சந்தாதாரர்களைத் தாண்டிவிட்டால் Diamond Award என அவ்வப்போது யூடியூப் அங்கீகார பரிசுகள் அனுப்பும்.




உங்கள் காணொளிகளை மக்கள் விரும்பிப் பார்க்கும் பட்சத்தில், உங்களால் யூடியூப் மூலம் நல்ல வருமானத்தைப் பெறமுடியும் என்பது உண்மைதான். யூடியூபிலும் நாளுக்கு நாள் போட்டி அதிகரித்துக்கொண்டேதான் வருகின்றன. ஆனால், தரமான வீடியோக்கள் உங்கள் சேனலில் இடம்பெறுமானால், மக்கள் நிச்சயம் உங்கள் பக்கம்தான்.



# இலங்கையின் 40வது தேசிய ஸ்குவாஷ் விளையாட்டுப் போட்டியில் வெற்றியடைந்துள்ள Fathoum zaleeha Issadeen

வீர மங்கையை மனம் திறந்து பாராட்டுவோம்.









# ரினூஷா நௌஷாட் உடன் ஒரு நேர்காணல்

நேர்காணல்
பாத்திமா ஷிப்னா ஆதம்

## உங்களது பூர்வீகம் (பிறப்பிடம்),கல்லூரி வாழ்க்கை பற்றிக் கூறுங்கள்?

நான் பிறந்தது கம்பஹா மாவட்டம் ராகமை எனும் பிரதேசத்தில், எனது உம்மம்மா மற்றும் அவரது குடும்பம் வவுனியாவில் வசித்து வந்தமையினால் யுத்த நெருக்கடிகள் அவர்களை அங்கே நிம்மதியாக வாழும் அளவிற்கு விட்டுவைக்கவில்லை எனவே அங்கிருந்து இடம்பெயர்ந்து மாபோலை பிரதேசத்தில் சிறிது நாட்கள் வாழ்ந்து விட்டு பின் அங்கிருந்து அனுராதபுரம் நாச்சியாதீவிற்கு குடிபெயர்ந்தனர்.

எனது உம்மாவின் பெயர் சித்தி செய்னப்.என் தாயிற்கு நான் ஒரே பிள்ளைதான், சிறுவயதில் இருந்து என்னுடைய மாமாமார், சித்திமார்களின் கண்காணிப்பிலேயே வளர்ந்தேன் உம்மம்மா தான் என்னை வளர்த்தார். தாய் சிறுவயதில் வெளிநாடு சென்றுவிட்டார், ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி என அனைத்தும் அ/நாச்சியாதீவு மு .ம . வித்தியாலயத்திலேயே கற்றேன். பின் க .பொ .த உயர்தரம் சித்தியடைந்த எனக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை, எனவே ஊடகத்துறையில் உள்ள ஈடுபாட்டினால் 2012 ஆம் ஆண்டு இலங்கை தொலைக்காட்சி பயிற்சி கல்லூரியில் Dip In Media Studies கற்கை நெறி முடித்த கையோடு தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிபுரிய ஆரம்பித்தேன்.



## உங்கள் குடும்பப் பின்னணி பற்றிக் குறிப்பிடுங்கள்?

எனது தாயுடன் சேர்த்து மொத்தம் பத்து சகோதரர்கள், ஐந்து ஆண்கள் மற்றும் ஐந்து பெண்கள் ஆனாலும் என் தாய்க்கு நான் மட்டுமே பிள்ளை என்பதால் எனது குடும்பத்தில் உள்ள அனைவரும் என்னை மிக்க அன்புடனும் கண்டிப்புடனும் வளர்த்தனர் .நான் அதிகமாக தாயுடன் இருந்ததை விட உம்மம்மாவுடனேயே இருந்திருக்கின்றேன் சுமார் 23 வருடங்கள் அவரே என்னை பராமரிக்கவும் செய்தார்.என் தந்தையை தாய் விவாகரத்து செய்தமையால் யாரும் என்னை தந்தை இல்லாத குறையை தெரியாதபடியே வளர்க்கச்செய்தனர்





## உங்கள் தொழில் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வீர்களா?

இலங்கை தொலைக்காட்சி பயிற்சி கல்லூரியில் (SLTTI ) இல் டிப்ளோமாவை முடித்தவுடன் Dan தொலைக்காட்சியில் 6 மாதங்கள் பணியாற்றினேன்.

அங்கு ஒருசில நிகழ்ச்சிகளை தயாரித்து தொகுத்து வழங்கினேன் பின் செரண்டிப் எனப்படும் இஸ்லாமிய இணைய வானொலியொன்றில் அறிவிப்பாளராகவும் பணியாற்றினேன்.

மாதங்கள் சில கழித்து உதயம் TV என்று உருவாகிய (இன்று UTV ) என்றழைக்கப்படும் தொலைக்காட்சியில் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் இன்று வரை தயாரிப்பாளராகவும் நிகழ்ச்சி வழங்குநராகவும் கடமையாற்றி வருகின்றேன்

# உங்களை ஊடக துறைக்கு வர தூண்டிய விசேட காரணங்கள் யாவை?

உண்மையில் ஊடகத்துறைக்கு வரதூண்டிய விடயங்கள் பல இருக்கின்றன.
நான் கல்விகற்றுக்கொண்டிருந்த காலங்களில் பொழுதுபோக்கு நேரங்களில் பல தொ.காட்சி ரியாலிட்டி நிகழ்ச்சிகளை பார்ப்பது வழக்கம் .சக்தி TV ,Sun TV, கலைஞர் TV என்று பல தமிழ் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் அறிவு சார் நிகழ்ச்சி , விருதுவழங்கும் நிகழ்ச்சி என அனைத்தையும் இடைவிடாது பார்ப்பேன்.

பாடசாலை காலங்களில் அகில இலங்கை தமிழ்மொழி தின போட்டிகளில் இரண்டு தடவைக்கும் மேல் முதலிடத்தை குழு நிகழ்ச்சிக்காக பெற்றும் இருக்கின்றேன் மற்றும் பாடசாலையில் கல்வி கற்கும்போது குழுநிகழ்ச்சிகளில் ஆர்வமாக கலந்து கொள்வேன், அத்துடன் உயர்தரம் கற்கும் காலங்களில் இலங்கையின் ஒருசில தொலை காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டுள்ளேன்.

இப்படித்தான் ஒவ்வொரு விடயங்களும் எனக்குள் ஊடக ஆசையை தூண்டி விட்டன



## எப்போது, எந்த வயதிலிருந்து ஊடக துறையில் பணி செய்ய ஆரம்பித்தீர்கள்? எத்தனை வருடங்களாகச் செய்து வருகின்றீர்கள்?

நான் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் ஊடகத்தில் பணிபுரிந்து வருகிறேன் Dan TV மற்றும் செரண்டிப் FM இல் இரண்டு வருடங்களும் UTV யில் 6வருடங்களும் பணியாற்றி இருக்கின்றேன் . என்னுடைய 24 வது வயதில் ஊடகத்திற்குள் காலடி எடுத்து வைத்தேன் என்பதும் குறிப்பிட்டுக்கொள்கின்றேன்

## உங்கள் CGC Talk Shop செனல் பற்றியும் கொஞ்சம் சொல்லலாமே?

CGC Talk Shop பற்றி கூற நாட்கள் போதாது அதன்மூலம் இப்பொழுது வேண்டுமானால் எனக்கு புகழ் அதிகமாக கிடைத்திருக்கலாம் ஆனால் இவ்வளவு தூரம் வருவதற்கு பல அவமானங்களே அடித்தளமாய் இருந்தன. பள்ளத்தில் விழும்போது யாரும் பார்க்காமல் எழுந்துவிட வேண்டும் ஆனால் வாழ்க்கையில் விழும்போது பலரும் பார்க்கவே எழுந்திடுதல் வேண்டும் என்று பேச்சாளர் மகேஷ் சொல்வது போல் தான் நானும் 2018ஆம் ஆண்டு எதேச்சையாக எழுத்தாளர்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் முகநூலிலும் யூடியூப் தளத்திலும் இந்த பக்கத்தை ஆரம்பித்தேன் முகநூலில் Confident Group of Ceylon என்றும் யூடியூப் இல் CGC Talk Shop என்றும் ஆரம்பித்தேன் இளைஞர்களை ஒன்றிணைக்கவும் ஊக்குவிக்கவும் திறம்படுத்தவும் பேச்சால் முடியும் என்பதால் பல ஊக்குவிப்பு பேச்சுக்களை பேசினேன் தற்பொழுது யூடியூப் தளத்தில் நேர்காணல்கள் செய்திகள் என பல விடயங்களை செய்து வருகின்றேன், மக்களும் எனக்காக பல ஆதரவை கொடுத்து வருகின்றனர் மற்றும் முகநூல் பக்கத்தை இந்திய தமிழர்களே அதிகம் விரும்பி பார்க்கின்றனர், எந்த கல்லும் அடிவாங்காமல் சிலையாவதில்லை என்பதற்கு என்னுடைய யூடியூப் தளமும் ஒரு உதாரணம்

# சமூக சேவைகள் செய்வதில் நீங்கள் எவ்வகையான மனநிறைவை அடைந்து கொள்கின்றீர்கள்?

சமூக சேவைகள் செய்யும் பொழுது அதிலொரு ஆத்ம திருப்தி கிடைக்கும் அவ்வகையான திருப்தி உண்மையில் மனதில் தேங்கி கிடக்கும் அனைத்து சவால்களையும் துன்பங்களையும் மறக்கச்செய்து விடும் அவ்வகையான திருப்தியை கிரகிக்க முடியாது என்பது தான் நிதர்சனமான உண்மை சமூகசேவையின் சுவை கண்டுவிட்டால் அதன்மூலம் கிடைக்கும் மனதிருப்திக்காகவே வாழும் காலமெல்லாம் ஏதோவொரு வகையில் கையில் உள்ளத்தைக் கொண்டு பிறரை இன்புறச் செய்யலாம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை !









## எவ்வகையான சமூகப் பணிகளைச் செய்து வருகின்றீர்கள்? யார் யாருக்கெல்லாம் உங்கள் அமைப்பினூடாக உதவிகள் வழங்கப்படுகின்றன?

உண்மையில் நம்மிடம் அளவுக்கதிகமாக உணவு இருக்கும் பட்சத்தில் இரண்டு பார்சல் உணவுகளை பாதையோரம் அமர்ந்திருக்கும் இரு யாசகர்களுக்கு வழங்கி பாருங்கள் , அப்பொழுது நாம் எல்லையற்ற மகிழ்ச்சியை அடைவோம் இம்மகிழ்ச்சி உணவில் மட்டுமல்ல நம்மிடம் மேலதிகமாக இருக்கும் ஏனையவைகளையும் வழங்கும் பொழுது கிடைக்கும் CGC யை பொறுத்த வரை இதுவரையில் பல வறிய மாணவர்களுக்கு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்த பெருமையும் பெயரும் இருக்கின்றது , அத்துடன் கடந்த வருடம் முதியோர் இல்லம் ஒன்றிற்கு சென்று அங்குள்ள ஆதரவற்ற முதியோர்களுக்கு மதிய உணவு மற்றும் போர்வைகளை வழங்கி இருந்தோம் அவற்றை செய்யும் பொழுது இன்னும் இன்னும் செய்யதூண்டப்படுகின்றோமே தவிர அச்சேவையை நிறுத்துவதற்கு அணுவளவேனும் எண்ண முடியாது Covid முடக்கம் காரணமாக கடந்த நாட்களில் பல யாசகர்களுக்கு CGC மூலமாக மதிய உணவுகளை வழங்கினோம் , ஒருவிடயத்தை இவ்விடத்தில் குறித்துக்கொள்ள வேண்டும் , ஒருசில சமூக சேவைகளை நாங்கள் வெளியே சொல்வதில்லை மற்றும் எங்கள் முகநூலிலும் Upload செய்வதில்லை காரணம் சமூக சேவையின் பிரதிபலனும் புண்ணியமும் மாத்திரமே எங்களுக்கு தேவைகருதி நாங்கள் அவற்றை ஒருபோதும் பொதுவெளியில் காண்பித்து புகழடைய விரும்புவதில்லை.






## உங்களின் சேவைகளைப் பாராட்டி விருதுகள் கிடைத்துள்ளனவா? அதுபற்றிக் குறிப்பிடுங்கள்?



விருதுகள் பற்றி சொல்வதற்கு என்னிடம் எதுவும் இல்லை ! விருதுகள் கிடைக்கவில்லை என்று நினைத்து பெரிதளவில் கவலை கொண்டதும் இல்லை,ஆனால் விருது பெறும் அளவிற்கு நான் இன்னும் தகுதியை வளர்த்துக்கொள்ளவில்லை என்பதை அடிக்கடி உணர்வேன் எனது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நேர்காணல்களை பார்த்து பலர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாராட்டுவர் அதுவே எனக்கு மிகப்பெரும் விருது போல் இருக்கும் ஒரே ஒரு தடவை 2019 ஆம் ஆண்டு **தொலைக்காட்சி அரச விருது வழங்கும் விழாவில் ஒரு புலனாய்வு தேடல் அறிக்கையில் தேசிய விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டேன்.**

# பல்வேறு வகையான தலைப்புக்களில் நீங்கள் ஆற்றிய உரைகளை இணைய ஊடகங்களில் காண முடிகிறதே, நீங்கள் ஆற்றிய அந்த உரைகள் பற்றியும் சொல்லலாமே?

ஆம் Confident Group of Ceylon எனும் எனது முகநூல் பக்கத்தில் பல சமூக பிரச்சினைகள் மற்றும் அரசியல் சார்ந்த விடயங்களை பேசியிருக்கின்றேன் .

இந்த தொழில்நுட்ப யுகத்தில் பலரும் பலவகையான இன்னல்களுக்கு ஆளாகின்றோம், மன அழுத்தங்களையும் சோர்வுகளையும் இதயத்தில் சேமித்துவைக்கின்றோம் இளைஞர்கள் திடீரென சோர்ந்து விடுகின்றனர். இவ்வாறு நடக்கும் போது நாம் முன்னேறுவதை விட பின்னோக்கியே நகர்ந்து நேரத்தை வீண்விரயம் செய்கின்றோம் ஒரு நிமிடத்தை கடந்து விட்டால் மீண்டும் அதை கனவில் நினைத்தாலும் பெற்றுக்கொள்ள முடியாது அவ்வகையான நேரங்களில் மாணவர்கள், இளைஞர்கள், இல்லத்தரசிகள், பெற்றோர்கள் என அனைவருக்கும் நல்லவற்றை கற்றுக்கொடுப்பதுடன் எப்போதும் உற்சாகமாகவும் தொலைநோக்கு சிந்தனையுடனும் செயற்படும் வகையில் எனது உரைகள் பல அமைந்துள்ளன!



# உங்கள் வாழ்வில் மறக்க முடியாத சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுங்கள்?

வாழ்வில் மறக்கமுடியாத சம்பவங்கள் நல்லவைகளும் தீயவைகளும் சமமாகவே இருக்கின்றன,ஒரு நல்ல விடயத்தை இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்,நான் தரம் ஆறில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் பொழுது வீட்டில் போதியளவு பொருளாதார வசதிகள் மிகையாக இருக்கவில்லை, உணவுத்தேவைகளுக்கு எந்த வித சிக்கலும் இல்லாமல் இருந்தாலும் அடிப்படை தேவைகளுக்குள் நான் சில நேரங்களில் நெருக்கப்பட்டிருக்கின்றேன் அந்த நேரத்தில் என்னிடம் எனது பாடசாலை சீருடையை Iron செய்வதற்கு Iron Box இருக்கவில்லை ,பாடசாலை சென்றால் மாணவத்தலைவர்கள் பாடசாலை சீருடையை Iron செய்து அணிந்து வருமாறு என்னை தினமும் கட்டளையிட்டனர் Iron Box வாங்குவதற்கு போதிய பணம் வீட்டில் இருக்கவில்லை , இந்த சம்பவம் காரணமாக நான் தாழ்வு மனப்பான்மைக்குள் (inferiority complex) தள்ளப்பட்டேன், ஏனைய மாணவர்கள் பாடசாலை சீருடையை பார்த்து ஏன் நம்மால் மாத்திரம் இப்படி அழகாக அணிந்துசெல்ல முடியவில்லை என ஏங்கிக் கொண்டிருந்தேன், அப்போது ஒருநாள் மாலை நேரம் என் தாயின் தம்பி ராஜா மாமா வீட்டிற்கு வந்திருந்தார் எப்பொழுதும் அவர் என்னிடம் கேட்பார் ஏதாவது வேண்டும் என்றால் தயங்காமல் கேள் நான் வாங்கிக் கொடுக்கின்றேன் என்று பெரும்பாலும் சிறுவயதில் நான் கல்விகற்க தேவையான பல உதவிகளை அவரே செய்துள்ளார் , எனவே அவரை இன்னலுக்குள்ளாக்க நான் விரும்பவில்லை பின் நான் மாமாவிடம் கூறினேன் என்வெள்ளை சீருடையை Iron செய்து வருமாறு மாணவ தலைவர்கள் கூறுகின்றனர் அதனால் தான் யோசித்துக்கொண்டிருந்தேன் என்று கூற இரு வருகின்றேன் என்று கூறிவிட்டு உடனடியாக ஒரு Iron Box ஒன்றை வாங்கி வந்து என் கையில் கொடுத்தார், உண்மையில் என்னோடு என் தந்தை இருந்திருந்தால் கூட இப்படி செய்திருக்க மாட்டார் ,ஆனால் என் மாமா அதை செய்தார் இச்சம்பவம் என்னால் மறக்க முடியாத ஒன்றாக என் இதயத்தில் குடியிருக்கின்றது, அவர் மாத்திரமல்ல எல்லா மாமாமார்களும் என்னை வளர்க்க பல தியாகங்களை செய்தனர். நான் Dip in media studies பயிற்சிக்காக மல்வானையில் உள்ள என் பெரியப்பா வீட்டில் தங்கியே கொழும்பிற்கு வந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது, அவரும் தினமும் என்கையில் 500 ரூபாய் தந்து கல்விகற்பதற்காக பஸ்சிலேற்றி அனுப்பிவைப்பார் ! இன்று லட்சங்கள் உழைத்தாலும் அவர்கள் அனைவரும் எனக்காக செய்த தியாகங்களுக்கு ஈடாகாது ! அவற்றை மறப்பதும் முடியாது

# இந்த நேர்காணலூடாக விசேடமாகக் கூற விரும்பும் செய்தி என்ன?

**இந்த நேர்காணலினூடாக எனக்கும் ஒரு வாய்பளித்தமைக்கு Sky தமிழ் ஊடகத்தின் நிறுவனர் சகோதரர் பாஸித் அவர்களுக்கு என் உளப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்**

வாழ்க்கையில் எந்தவொரு விடயத்தையும் காயப்படாமலும், புண்படாமலும் ,கஷ்டப்படாமலும் எட்டிப்பிடித்து அதில் சிம்மாசனமிட்டு அமர்ந்து அழகு பார்க்க முடியாது என்பதே உண்மை. நம்மில் பலர் ஜெயித்துக்கொண்டிருப்பவர்கள் சொல்வதை செவிசாய்ப்பதை விட ஜெயித்துக்காட்டியவர்கள் சொன்னால் உடனே கேட்டுவிடுகின்றனர். இந்த இணயயுகம் கோடிமக்களை மனிதர்களிடமிருந்து தூரப்படுத்தி வெறுமனே இயந்திரங்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்துகின்றமையால் மானுடர் மத்தியில் மனஅழுத்தம் வேர்விட்டு விருட்சமாய் வளர்ந்து நிற்கிறது எனவே உடலில் உள்ள ஆரோக்கியத்துக்கு முன்னுரிமை கொடுக்குமுன் எப்பொழுதும் நம் மனதை ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் வைத்துகொள்ளச்செய்வது மிகப்பெரும் கடமையாக மனிதர்களாகிய நமக்கு உள்ளது . வாழ்க்கையில் நல்ல உறவுகளை சம்பாதிப்பதிலும் அடுத்தவர் மீது அன்பு செலுத்துவதிலும் எப்பொழுதும் நாமே முதலிடத்தில் இருக்க வேண்டும் என்று குறித்துவைத்துக்கொள்வோம் இந்த உலக வாழ்வு ஒருதடவை தான் எனவே கிடைத்த வாழ்க்கையை வீண்விரயம் செய்து பொடுபோக்காக வாழ்ந்து விடாமல் நல்லவற்றை விதைப்போம் நல்லவற்றையே அறுவடை செய்வோம் என்பதை கூறிக்கொள்கின்றேன்

## இறுதியாக என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

இறுதியாக பல விடயங்கள் கூற எண்ணியிருந்தாலும் சிலவிடயங்களை சுருங்கக்கூறுகிறேன், வாழ்க்கையில் எதையும் எதனுடனும் ஒப்பிட்டுப்பார்க்காதீர்கள், ஒப்பீடு எப்பொழுது துவங்குகிறதோ அன்றே நம் நிம்மதியும் சிறிது சிறிதாக குறைந்து போய் கானல் நீராக மாறிவிடுகிறது , இவ்வுலகில் வாழும் அனைத்து மனிதர்களுக்கும் இறைவன் ஏதோ ஒரு தனித்திறமையை வழங்கியிருக்கிறான் என்பது நிச்சயம் .அதுவே நிதர்சனம் எனவே அதன்படி செயற்படுவோம்! இதுவரை என்வாழ்வில் நான் உயர பெரும் பாடுபட்ட என் குடும்பத்தினர், ஆசிரியர்கள், ரசிகர்கள் CGC Talk Shop இன் செம்மையாக்குநர் சகோதரர் சு அரவிந்தன் அவர்களுக்கும் வாய்ப்பளித்த Sky தமிழ் ஊடகத்திற்கும் கோடிநன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்






Nuzaila Badurdeenதொகுத்து வழங்கும்

# துணிந்தெழு

"வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்"

Guest:

## Mrs.Fawaza Thaha

President YWMA

Former PPA Vice president of Muslim Ladies' College



sky தமிழ் NEWS

# துணிந்தெழு




YouTube LIVE

Sky தமிழ் - இணைந்திடுங்கள்!

## துணிந்தெழு இதழில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க

### தொடர்புகளுக்கு

+94 77 247 1464 +94 71 743 7867 +94 77 639 11 88


துணிந்தெழு
இதழ்களை
Whatsapp
மூலம்
பெற்றுக்கொள்ள
CLICK HERE


Riza Mehandi
Professional henna artist
Mehandi Art for all Occasion
(Bridal / Non Bridal)
Natural henna cones
& Organic Henna
Products supplier
Mehandi Classes
Available
0767732743
Riza Mehandi
@hennaby_riza






# Center for Psychology & Counseling - Sri Lanka

centerforcounseling | 0761619184 | centerforcounseling123@gmail.com